


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2026) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போராட்டத்தின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த திருவாளர்கள் தாளமுத்து – நடராசன் ஆகியோரது நினைவிடத்தில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், ப.தாயகம்கவி, ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி.சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2026) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டார். இப்பேரணியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## இந்தித் திணிப்பிற்காக ஒன்றிய பா.ஜ.க அரசு எத்தனை முறை படையெடுத்து வந்தாலும்

# தமிழ்நாட்டை ஒருபோதும் வீழ்த்த முடியாது!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

3 ஆயிரத்து 548 கோடி ரூபாய் நிதியைத் தராமல் இருப்பவர்தான் இந்த பிரதான்! “3 ஆயிரம், 5 ஆயிரம், ஏன் பத்தாயிரம் கோடி கொடுத்தாலும், மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம்!” என்று சொன்னவன்தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். பணத்தையும், அதிகாரத்தையும் காட்டி மிரட்டினால் பணிந்து செல்ல, நாம் என்ன அடிமைகளா? அண்ணா, கலைஞர் போன்ற தமிழ்ப் போராளிகளின் பரம்பரையில் வந்தவர்கள் நாம்! அதுமட்டுமல்ல, மொழிப்போர் வீரர்களான நடராசன் - தாளமுத்து - ராசேந்திரன் போன்றவர்களின் கொள்கை உணர்ச்சி எனக்குள் ஓடிய காரணத்தினால்தான், அப்படிச் சொன்னேன்!

**உங்களால் தமிழ்நாட்டை வீழ்த்த முடியாது!**

1938-இல் இருந்து இந்தித் திணிப்புக்கு எதிராக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்தி என்பது வெறும் மொழித் திணிப்பு மட்டுமல்ல! அது பண்பாட்டுப் படையெடுப்பு! இந்தியா முழுவதும் இந்தியின் ஆதிக்கத்துக்கு எத்தனை மொழிகள் பலியாயின? இந்தியை ஒதுக்கி, நாம் ஆங்கிலத்தைத் தொடரச் செய்ததால் தமிழ்நாடு எப்படி வளர்ந்தது என்று கடந்த ஆண்டு நான் ஒரு கடிதத் தொடர் எழுதினேன். இந்திய அளவில் அதற்கு மிகப் பெரிய வரவேற்பு கிடைத்தது. பல்வேறு மொழிபேசும் மக்கள், என்னுடைய பதிவுகளுக்குக்கீழ், தங்களுடைய மொழி இந்தியால் அழிந்தது எவ்வாறு என்று பகிர்ந்து கொண்டார்கள். அதுபோன்று தமிழ்நாட்டை அடிமைப்படுத்த வேண்டும் என்றுதான் காலந்தோறும் டெல்லி நம் மீது படையெடுத்து வருகிறார்கள்! நாம் பார்க்காத படையெடுப்பா! நீங்கள் எத்தனை முறை வந்தாலும் சரி, எத்தனை துரோகிகள், அடிமைகள், அரசியல் கோமாளிகள், கோழைகளை துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாலும் சரி, உங்களால் தமிழ்நாட்டை வீழ்த்த முடியாது!

**‘டப்பா எஞ்ஜின்’ தமிழ்நாட்டில் ஓடவே ஓடாது!**

உறுதியுடன் சொல்கிறேன்... ‘டபுள் எஞ்சின்’ என்று சொல்லி வடமாநில மக்களை ஏமாற்றி, அவர்கள் வாழ்வாதாரத்தை அழிக்கும் உங்கள் ‘டப்பா எஞ்சின்’ தமிழ்நாட்டில் ஓடவே ஓடாது! 2021-இல் பெற்ற தோல்வியில் இருந்து எந்தப் பாடமும் கற்றுக் கொள்ளாமல், மறுபடியும் கொத்தடிமைக் கூட்டமான அ.தி.மு.க.வின் தோளில் அமர்ந்து பா.ஜ.க. வருகிறது.

**தேர்தல் வருவதால் – பல வெரைட்டிகளில் வடை சுடுவார் மோடி!**

நேற்று முன்தினம் பிரதமர் மோடி அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டுச் சென்றிருக்கிறார். இனி, அடிக்கடி இந்தப் பக்கம் பிரதமர் மோடி அவர்களை எதிர்பார்க்கலாம்! தேர்தல் சீசன் வந்துவிட்டால் போதும், தமிழ்நாட்டுக்கு வந்து பல வெரைட்டிகளில் அவர் வடைகளைச் சுடுவது வழக்கம்தான்! இந்த முறையும் வந்தார்! வழக்கமான பழைய வடைகளைத்தான் சுட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்! அந்த மாவும் புளித்துப் போய்விட்டது! அதைக் கேட்டுக் கேட்டுத் தமிழ்நாட்டு மக்கள் காதும் புளித்துப்போய்விட்டது!

பிரதமர் வருகிறார் என்று சொன்னதும் சில கேள்விகளை நான் எழுப்பியிருந்தேன். நீங்கள் அனைவருமே ஊடகங்களில் அதைப் பாத்திருப்பீர்கள், படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்!

தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3 ஆயிரத்து 548 கோடி ரூபாய் கல்வி நிதி எப்போது வரும்?

தொகுதி மறுவரையறையில் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில் இருந்து எப்போது வரும்?

பா.ஜ.க.வின் முகவர்போன்று செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?

ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?

நூறு நாள் வேலைத்திட்டத்துக்குப் பதிலாக, மாநிலங்கள் மேல் நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் புதிய திட்டம் எப்போது கைவிடப்படும்?


பத்தாண்டுகளாக ‘இஞ்ச் இஞ்ச்’-ஆக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைக்கும் மதுரை ‘எய்ம்ஸ்’ எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போதுதான் எங்கள் கண்முன் வரும்?

இயற்கைப் பேரிடர்களுக்கான நிவாரணத் தொகை தமிழ்நாட்டுக்கு எப்போது வரும்?

ஒசூர் விமான நிலையத்துக்கு அனுமதி எப்போது கிடைக்கும்?

கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் ஓடுமா? என்று,

இவ்வாறு அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டேன்! இது எதற்குமே பிரதமர் மோடி அவர்கள் பதில் சொல்லவில்லை. இருந்தால்தானே சொல்வதற்கு! ஆனால், தேர்தல் குறித்த தன்னுடைய கற்பனைகளைப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2026) காஞ்சிபுரம் – மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள செல்லும் வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்திற்கு சென்று, அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தி, அங்குள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

**தோல்வியைப் பரிசாக தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தது மோடிக்கு மறந்து விட்டதா?**

பிரதமர் அவர்களே... கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நினைவிருக்கிறதா? உங்களுக்கு ஒரு தொகுதிகூட கிடைக்கவில்லை. தமிழ்நாட்டுக்கு நீங்கள் அத்தனை முறை வந்து பிரச்சாரம் செய்தீர்களே? அதற்குப் பரிசாக, முழுமையான தோல்வியைத் தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்குப் பரிசாகக் கொடுத்தது மறந்துவிட்டதா?

**தோல்வி தவிர எதுவும் காணாத – பத்துத் தோல்வி பழனிசாமி!**

உங்கள் அருகில் ஒருவர் அமர்ந்திருந்தாரே! அவர் என்ன வெறும் பழனிசாமி என்று நினைத்துவிட்டீர்களா? அவர் சாதா பழனிசாமி இல்லை! ‘தி கிரேட்’ பத்துத் தோல்வி பழனிசாமி! 2019-இல் இருந்து அனைத்துத் தேர்தல்களிலும் தோல்வியைத் தவிர வேறு எதையும் காணாத மாவீரர்! இப்படி ஒரு பெயிலியர் கும்பல் சேர்ந்து கொள்கையால் இணைந்திருக்கும் தி.மு.க. கூட்டணியை வீழ்த்தப் போகிறார்களாம்!

**தமிழ்நாட்டின் வளர்ச்சியை – இவர்கள் கெடுக்காமல் இருந்தால் போதும்!**

தமிழ்நாட்டில் NDA அரசு வரப்போகிறதாம், வளர்க்கப்போகிறதாம், பாடுபடப்போகிறதாம்! இதை எவ்வாறு பிரதமரால் சிரிக்காமல் சொல்ல முடிகிறது? நன்றாகக் கவனியுங்கள்... அ.தி.மு.க. அரசு இல்லை! அவர்களே இப்போது NDA அரசு என்றுதான் சொல்கிறார்கள்! நீங்கள் வந்து வளர்க்கும் நிலையிலா நாங்கள் இருக்கிறோம்? தமிழ்நாடு ஏற்கனவே வளர்ந்துதான் இருக்கிறது. நாளும் வளர்ந்துகொண்டே இருக்கிறது! இதை நீங்கள் கெடுக்காமல் இருந்தாலே போதும்!

தமிழ்நாடு, பொருளாதாரத்தில், தொழில் முதலீட்டில், கல்வியில், வேலைவாய்ப்பில், மருத்துவத்தில், சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் வளர்ந்திருக்கிறது. அதுவும் ஒன்றிய அரசாலேயே மறைக்கவோ, மறுக்கவோ முடியாத அளவிற்கு வளர்ந்திருக்கிறது. உங்கள் புள்ளிவிவரங்களே அதைத்தானே சொல்கிறது.

**அமைதியைக் குலைக்க பிரதமரே முயலுவதா?**

பிரதமர் மோடி அவர்களே... தமிழ்நாட்டை அழிக்கும் உங்கள் எண்ணம் பலிக்காது. பக்தர்கள் மனம் மகிழும் ஆட்சியை நடத்துகிறோம். காஞ்சிபுரம், கோயில்கள் நிறைந்த நகரம். இங்குக் குழப்பம் ஏற்படுத்த நினைத்தால், அந்த எண்ணம் நிறைவேறாது. நாடும், நாட்டு மக்களும் அமைதியாக வாழும் இந்த நிலை, சிலருக்குப் பிடிக்கவில்லை. நாட்டின் பிரதமரே இந்த நோக்கம் கொண்டவராக இருப்பது, அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

**‘டப்பா எஞ்சின்’ மாநிலங்களில் – பல கோடி ரூபாய் போதைப்பொருள்!**

தமிழ்நாட்டில் போதை மருந்து நடமாட்டம் அதிகமாகிவிட்டது என்று பொத்தாம் பொதுவாகப் பிரதமர் பதவியில் இருந்து அவர் பேசிவிட்டுச் செல்வது சரியல்ல! நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் துறைமுகங்கள் வழியாகக் கடத்தப்பட்ட 11 ஆயிரத்து 311 கோடி ரூபாய் அளவிலான போதைப் பொருள் பிடிபட்டிருக்கிறது என்று ஒன்றிய அரசு தெரிவித்திருக்கிறது. அதில் பெரும்பாலானவை குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத் துறைமுகங்களில்தான் சிக்கியிருக்கிறது. இந்த மாநிலங்களில் யார் ஆட்சி செய்கிறார்கள்? தி.மு.க.வா? இல்லையே! உங்கள் ஆட்சிதானே நடக்கிறது? ‘டபுள் எஞ்சின்’ என்று சொல்லும், ‘டப்பா எஞ்சின்’ தானே அங்கு ஓடுகிறது?

இந்தியாவுக்குள் போதைப்பொருள் நுழைவதைத் தடுக்க வேண்டியது, பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும்தான். இந்தஸ்டாலின் இல்லை. மகாராஷ்டிரா சென்று பேச வேண்டியதை, மதுராந்தகத்திற்கு வந்து பேசிவிட்டுச் செல்வது நியாயமா?

அடுத்து, தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று வேறு பிரதமர் அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். புதுமைப் பெண், விடியல் பயணம், உரிமைத்தொகை, தோழி விடுதி என்று பெண்களுக்காக நாங்கள் செயல்படுத்தும் திட்டங்களால் பெண்களின் சமூகப் பங்களிப்பு தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது! அதிகமான மாணவிகள் கல்லூரிகளுக்குப் படிக்க வருவது தமிழ்நாட்டில்தான்! இந்தியாவிலேயே அதிகமான பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பதும் தமிழ்நாட்டில்தான். இது எதுவும் தெரியாமல், ஆளுநர் ரவி போன்றே பிரதமர் அவர்களும் பேசுவது மிகமிக கண்டனத்துக்குரியது.

ஐந்து மாத கர்ப்பிணிப் பெண்ணான பில்கிஸ் பானு அவர்களைக் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய 11 குற்றவாளிகளை விடுதலை செய்தது உங்கள் குஜராத் அரசுதானே? உலகமே அதிர்ச்சி அடைந்தார்களே! உச்சநீதிமன்றமே அதை ரத்து செய்ததே! நீங்கள் பெண்கள் பாதுகாப்பு பற்றி பேசலாமா? அதுவும், ‘பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு முன்விடுதலை கிடையாது’ என்று சட்டமன்றத்தில் தடைச் சட்டம் நிறைவேற்றி இருக்கும் இந்த ஸ்டாலின் அரசைப் பற்றி நீங்கள் பேசுவதற்கு உங்களுக்கு யோக்கியதை இருக்கிறதா? அருகதை இருக்கிறதா? குற்றங்கள் அதிகமாக நடக்கிறது என்று பிரதமர் அவர்கள் பேச நினைத்தால், பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசம் சென்றுதான் பேச வேண்டும்! மணிப்பூரில் சென்றுகூடப் பேசுங்கள்!

**‘அ.தி.மு.க. அரசில்தான் ஊழல் அதிகம்’ எனப் பேசியது நினைவிருக்கிறதா?**

இன்னொரு கூத்து என்ன என்றால், அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் குற்றமே நடக்கவில்லை என்று சொல்லி அ.தி.மு.க. தொண்டர்களையும் பிரதமர் ஏமாற்றப் பார்த்திருக்கிறார். “குஜராத் மோடியா? இந்த லேடியா?” என்று தமிழ்நாட்டில் ஊர் ஊராகச் சென்று அம்மையார் ஜெயலலிதா கேட்டார் தெரியுமா? அதெல்லாம் மறந்துவிட்டதா? “இந்தியாவிலேயே அ.தி.மு.க அரசுதான் ஊழல் அதிகம் நடக்கும் அரசு” என்று நீங்களும் - உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களும் பேசியதாவது ஞாபகம் இருக்கிறதா? இது அனைத்தையும் நீங்கள் மறந்திருக்கலாம், தமிழ்நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள். வழக்கம் போன்று, இந்தத் தேர்தலிலும் பா.ஜ.க.விற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதைச் சிறப்பாகச் செய்து அனுப்பத்தான் போகிறார்கள்!

**ஒரு முறையாவது தலை நிமிர்ந்து பாருங்கள்! சூரியனின் இருப்பும், பவரும் தெரியும்!**

மோடி அவர்கள் இந்த மண்ணில் கால் வைத்ததுமே உதயசூரியனே மறைந்துவிட்டதாம், மழை வந்துவிட்டதாம்! சொல்வது யாரு? நம்முடைய பழனிசாமி, பத்துத் தோல்வி பழனிசாமி! வாழ்க்கை முழுவதும் கால்களை மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்தால், சூரியன் எப்படி உங்கள் கண்களுக்குத் தெரியும் பழனிசாமி அவர்களே? ஒருமுறையாவது தலைநிமிர்ந்து பாருங்கள்! அப்போதுதான் சூரியனின் இருப்பும், பவரும் உங்களுக்குத் தெரியும்!

**நாங்கள் பணிய மாட்டோம்! துணிந்து ஒரு கை பார்ப்போம்!**

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து செய்துகொண்டு வரும் வஞ்சகத்தைத் தட்டிக் கேட்கும் துணிச்சலும், முதுகெலும்பும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும்தான் இருக்கிறது. சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற பெயரைக் கேட்டாலே, ஓடி ஒளியும் கோழைகள் தமிழ்நாட்டின் உரிமைகளை எவ்வாறு காப்பாற்றுவார்கள்?

பா.ஜ.க.வின் ஏவல் படையாகச் செயல்படும் புலனாய்வு அமைப்புகளை வைத்துக் கொண்டு, தி.மு.க.வை மிரட்டிப் பார்க்கலாம், பணிய வைக்கலாம் என்று நினைத்தால், மக்கள் ஆதரவுடன் அதை எதிர்கொள்ளும் உறுதி தி.மு.க.விற்கு இருக்கிறது! நாங்கள் பணிய மாட்டோம். துணிந்து ஒரு கை பார்ப்போம்! மண் - மொழி - மானம் காத்திடும் எங்கள் ஈராயிரம் ஆண்டுப் போரைத் தொடர்ந்திடுவோம்!

**வெற்றியை உறுதி செய்யும் களம் இது!**

2026 தேர்தல் களமும் ஆரிய - திராவிடப் போரின் மற்றொரு களம்தான்! தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைக்கும் அரசியல் எதிரிகளையும், அந்த எதிரிகளின் கூலி பட்டாளமாகிவிட்ட அடிமைகளையும் எதிர்கொண்டு வெற்றியை உறுதிசெய்யும் களம்தான், இந்தக் களம்!

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சி மண்ணிலிருந்து நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, கழக உடன்பிறப்புகளே, கூட்டணித் தோழர்களே, தோழமை இயக்கத்தவர்களே, உங்கள் பரப்புரையை இன்றே தொடங்குங்கள்.

ஐந்து ஆண்டுகளாக நாம் மக்களுக்குச் செய்துகொண்டு வரும் நலத் திட்டங்கள் தொடர வேண்டும் என்றால், திராவிட மாடல் அரசு தொடர வேண்டும்! உத்தரப் பிரதேசம் போன்று, மணிப்பூர் போன்று, தமிழ்நாடு வன்முறைக் காடு ஆகாமல் தடுக்கப்பட வேண்டும்.

**மொழிப்போர் ஈகியர்களின் தியாகத்தின் மீது உறுதி எடுப்போம்!**

திராவிட மாடல் அரசு தொடர, கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க, மொழிப்போர் ஈகியர்களின் தியாகத்தின் மீது உறுதி எடுப்போம்!

பேரறிஞரைத் தந்த அண்ணாவின் காஞ்சியில் இருந்து நான் உறுதியாகச் சொல்கிறேன். டெல்லியின் ஆதிக்கத்துக்கு, தமிழ்நாடு என்றைக்கும் தலைகுனியாது! மீண்டும் சொல்கிறேன், டெல்லியின் ஆதிக்கத்துக்கு, தமிழ்நாடு என்றைக்கும் தலைகுனியாது! தீ பரவட்டும்! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

